


இலங்கை - யாழ்ப்பாணம்

அளவையூரைப் பிறப்பிடமாகவும்

ஜேர்மனி நாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் உயர்திரு
# சிவஞானம் ஸ்ரீகணநாதன் அவர்களின்

# நினைவு மலர்

23-02-2017

உ

ஓம் மஹா கணபதி துணை



இலங்கை - யாழ்ப்பாணம்

அளவையூரைப் பிறப்பிடமாகவும்

ஜேர்மனி நாட்டை வசிப்பிடமாகவும் கொண்டவரும்

உயர்சைவ வேளாண்குல மரபில் தோன்றியவருமான

# அமரர் உயர்திரு சிவஞானம் ஸ்ரீகணநாதன்

அவர்கள்

சிவபதமடைந்தமை குறித்து வெளியிடப்பெற்ற

# நினைவு மலர்

23-02-2017

உ
சிவமயம்

# சமர்ப்பணம்

அருந்தவப் பயனால் அவனியில்
அவதரித்த அன்புத் தெய்வமே!
எங்கள் வாழ்வில் நறுமணம் பரப்ப
அன்பை வாரி வழங்கி
புன்னகை வார்த்தையால் அறிவூட்டி
எம் வாழ்வுக்கு வழிகாட்டி வளர்த்தெடுத்த
ஆலமர விருட்சமாய் வியாபிக்க வைத்து
இன்பத்திற்கோர் உறைவிடமாய் இருந்து
ஈகைக்கோர் உத்தமராய் வாழ்ந்து
பாரினிலே புகழோடும் மிடுக்கோடும்
பதினாறும் பெற வழிகாட்டி
மாறாத நினைவுகளை எமக்களித்து
எம்மை விட்டுப்பிரிந்த அன்புத் தெய்வத்தின்
மேன்மையுறு திருப்பாதார விந்தங்களுக்கு
இம் மலர் சமர்ப்பணம்


ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



என்றும் நீங்கா நினைவுகளுடன்
**அன்பு மனைவி,**
**பாசப் பிள்ளைகள்**

உ

சிவமயம்



தோற்றம்
1951-03-17

மறைவு
2017-01-24

# அமரர் உயர்திரு சிவஞானம் ஸ்ரீகணநாதன்

## அவர்கள்

### திதி வெண்பா

ஆண்டு துர்முகி வருமுயர் தைமாதத்து
அபரபட்ச துவாதசி திதிதனில் - நீண்டபுகழ்
ஸ்ரீகணநாதன் இப்பிறவி வேண்டாமென ஏகினார்
கும்பழாவளையான் திருப்பாதங்களை என்றறி

உ
சிவமயம்



# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆறமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதமளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர்விளக்கே! உலாப்பிலாஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர்ப்பளிங்கின் திரள்மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும்தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக்கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமாவிளம்பே.

## திருப்பல்லாண்டு

சீரும்திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு
பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊருமுலகுங் கழற
உளறியுமை மணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும்
பாரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

துள்ளுமத வேட்கை கணையாலே
தொல்லை நெடுநீலக் கடலாலே
மெல்லவரும் சோலைக் குயிலாலே
மெய்யுருகு மானை தருவாயே
தெள்ளுதமிழ் பாடத் தெளிவோனே
செய்ய குமரேசற் திறலோனே
வள்ளல் தொழு ஞானக் கழலோனே
வள்ளி மணவாளப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



# அமரர் திரு. சிவஞானம் ஸ்ரீகணநாதன் அவர்களின்
# வாழ்க்கை வரலாறு

ஆதிசூழ் இலங்காபுரியின் சிகரமெனத் திகழ்வது சிவபூமியாம் யாழ்ப்பாணம். இதில் பரந்து விரிந்த பதியாம் அளவையூர். அப்பதிதனில் தோன்றிய அமரர் சிவஞானம் ஆதிநாயகி தம்பதிகளின் இல்வாழ்க்கைப் பயனாக மூத்த அருமை, ஆசை மகனாக 1951ஆம் ஆண்டு பங்குனி மாதம் 17ஆம் திகதி பிறந்தவர் அமரர் சிவஞானம் ஸ்ரீகணநாதன். இவருடன் பாலச்சந்திரன், அகிலேஸ்வரி, ஜெகதீஸ்வரி, இராஜநாதன், ஏகாம்பரநாதன் ஆகியோர் சகோதரர்களாயினர்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை அளவெட்டி சதானந்தா வித்தியாலயத்திலும், இடைநிலைக்கல்வியை யா/அருணோதயாக் கல்லூரியிலும் கற்றார். பின்னர் இராமநாதன் கல்லூரியில் மிருதங்கக் கலையையும் பயின்றிருந்தார். இவர் தனது தொழில் நிமித்தம் 1980ஆம் ஆண்டு சிங்கப்பூர் சென்றிருந்தார். அங்கு சில வருடங்கள் பணியாற்றி வரும்போது இவரது தந்தையார் 1983ஆம் ஆண்டு அமரத்துவம் எய்தியதால் சிங்கப்பூரிலிருந்து இலங்கைக்கு வந்து தமது கடமைகளை முடித்துவிட்டு மீண்டும் சிங்கப்பூர் சென்றிருந்தார். பின்னர் இலங்கை வந்து 1984ஆம் ஆண்டு ஆனி மாதம் 6ஆம் திகதி மல்லாகத்தில் வசிக்கும் அரசதுங்கம்தெய்வநாயகி தம்பதிகளின் மூத்தமகள் ஜெகதீஸ்வரி எனும் நங்கையை திருமணபந்தத்தில் இணைத்துக் கொண்டார். 1985ஆம் ஆண்டு தம்பதிகள் ஜேர்மனி சென்று தம் புதுமண வாழ்க்கையைத் தொடர்ந்தார்கள்.

***"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்***
***நன்கலம் நன் மக்கட்பேறு"*** என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க ஸ்ரீகணநாதன் ஜெகதீஸ்வரி தம்பதிகளின் இல்வாழ்வின் பயனாக 1985ஆம் ஆண்டு வைகாசி மாதம்

28ஆம் திகதி ஓர் அழகிய பெண்குழந்தையைப் பெற்று மகிழ்ந்தனர். மூன்று ஆண்டுகளின் பின் 1988ஆம் ஆண்டு பங்குனி மாதம் 31ஆம் திகதி ஓர் ஆண்குழந்தையையும் பெற்று உவகை அடைந்தனர். இரு பிள்ளைச் செல்வங்களும் கல்வி கற்று மேல்நிலைக்கு வரவேண்டும் என்ற இலட்சியத்தோடு வாழ்ந்த அமரர் அவர்கள், அதன்வழியே பிள்ளைகளைக் கல்வியில் மிளிர வைத்தார்.

அமரர் அவர்கள் 1990ஆம் ஆண்டில் இருந்து 2006ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஜேர்மனி தமிழ் இசைக்குழுவில் மிருதங்கம் வாசித்து வந்தார். இவர் ஜேர்மனியில் பல கலை நிகழ்வுகளில் மிருதங்கம், தபேலா வாசித்து தனக்கும், தன் குடும்பத்தினருக்கும், தன் ஊரிற்கும் பெருமை சேர்த்துள்ளார். இவரது தாயார் 2008ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - அளவெட்டியில் அமரத்துவம் எய்தியபோது இவர் ஜேர்மனியிலிருந்து மிகவும் வேதனை அடைந்தார்.

இவர் எல்லோரையும் தன் நகைச்சுவை கலந்த பேச்சால் மகிழ வைப்பதில் முன்நிற்பவர். இவரது மூத்த மகள் ஸ்ரீதாட்சாயினி கல்வியில் மேன்மையடைந்து Civil Engineer ஆகவும் இளையமகன் ஸ்ரீகஜன் Electrical Engineer ஆகவும் பணியாற்றி வருகின்றார்கள். தம் பிள்ளைகளின் உயர்வால் பெருமையும், ஆனந்தமும் கொண்டு வாழ்ந்து வந்தார். தமது மகளிற்கு 2008ஆம் ஆண்டு ஆடிமாதம் 12ஆம் திகதி வாதரவத்தை புத்தூரைச் சேர்ந்த திரு.திருமதி. இராஜேந்திரன் .தம்பதிகளின் 4ஆவது மகன் இராஜாரமேஸ் என்பவரைத் திருமணம் முடித்துக் கொடுத்தார். இவரது மருமகன் சிறந்த கல்விமானாகவும் கணித டிப்ளோமாதாரியாகவும் திகழ்ந்தார். ஒரு சிறந்த கணித விரிவுரையாளராக ஜேர்மனியில் கடமையாற்றி வருகின்றார். அமரர் அவர்கள் தனது மனைவி, மகள், மகன் மருமகனுடன் சந்தோசமாக வாழ்ந்த காலத்தில் ஓர் ஆண்குழந்தையைப் பேரச் செல்வமாகப் பெற்றுக்கொண்டார். இக்குழந்தைக்கு இராம் எனப் பெயரிட்டு கொஞ்சிக்குலாவி இன்பமுற்று வாழ்ந்த காலத்தில் இவருக்கு சிலசில நோய்கள்

வாட்டி வதைத்து வந்தது. தன் நோய்களையும் வேதனைகளையும் மற்றவர்களுக்கு வெளிக்காட்டாமல் தன் நகைச்சுவைப் பேச்சால் இன்பமாகப் பேசி வாழ்ந்த அமரர் சிவஞானம் ஸ்ரீகணநாதன் அவர்கள் தனது 66 ஆண்டுகால இப்பூவுலக நல்வாழ்க்கையை சீரும் சிறப்புடனும் வாழ்ந்து எல்லாச் செல்வங்களையும் சிறப்புக்களையும் பெற்று 2017ஆம் ஆண்டு தை மாதம் 24ஆம் திகதி கும்பழாவளையான் பாதக்கமலத்தடியில் சேர்ந்தார். இவரது ஆத்மா விநாயகரின் பாதக்கமலங்களில் நித்திய பேரானந்தம் அடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



# மனையாள் புலம்பல்

கரம் பிடித்தேன் உம்மை
காத்திட்டீர் எங்களையே..
இனிய மணநாளில்
இணைந்த உறவே
என்றும் என் கண்கள்
ஏங்குது உம் முகம் காண
நான் தொலைத்துவிட்ட
என் உயிரைத் தேடுகின்றேனே...

எப்போது காண்போம் இனி
எழுந்து ஒரு தருணம் வாரீரோ....
உங்கள் அன்பான கதையைக் கேட்க
உயிர்த்தெழுந்து வாரீரோ......
வேதனைத் தீயிலே வேகுகின்றேன்
விரைந்து ஓடி வாரீரோ.....
கனிவான கண்டிப்பை உணர்வதற்காய்
காண உடன் வாரீரோ.....

நிமிடங்கள் பறந்து போகும்
நாட்களும் நகர்ந்து போகும்
மாதங்களும் மறைந்து போகும்
வருடங்கள் ஓடிப் போகும்
ஆனாலும் உங்கள் நினைவு
எம் நெஞ்சை விட்டகலாது
எத்தனை சொந்தங்கள் எனக்கிருந்தாலும்
அத்தனையும் நீங்கள் போல் இருக்குமா?

என்ன நடந்தாலும் எப்போதும்
எனக்கும் பிள்ளைகளுக்கும் நீர்
உற்ற நண்பனாக என்றும்
உறுதுணையாக இருப்பீர்கள் என்றிருக்க
பற்றற்று நீங்கள் பரலோகம் சென்றதேனோ?
பதறி அழுகின்றோம் உம்பிரிவை எண்ணி
கண்ணீரை எமக்குப் பரிசாக தந்துவிட்டு
கடவுளிடம் நீங்கள் சென்றதேனோ?

நித்திரை விட்டு எழும்புவீர்கள் என நினைக்க
நீங்கள் உறக்கத்தில் உறைந்ததேனோ?
அப்பா அப்பா என நான் அழுகையில்
ஆண்டவன் மடியில் நீர் சேர்ந்ததேனோ?
கடைசியில் இருவரும் துணையாய் வாழ்வோம் என
கதைத்தது எல்லாம் கனவாய் போனதுவே
கடவுளிடம் சேர்ந்து நீங்கள் எம்மைக் காத்திட வேண்டும்.
காலமெல்லாம் உங்கள் நினைவுகளுடன்....

**மனைவி**

# சகோதரர்கள் புலம்பல்

எங்கள் தாயின் கருவறையில்
வந்துதித்த முதல் முத்தே
ஆறுபேர் நாம் என்று
அன்பால் இணைந்திருந்தோமே
இன்று உங்கள் பிரிவுச் செய்தி கேட்டு
இயங்க மறுக்கின்றது எம் உயிர்
கண்ணீர் சொரிகின்றோம் இங்கு
கதறி அழுகின்றோம் உம்மை எண்ணி....

அண்ணா அண்ணா என
ஆசையாய் அழைத்திட்டோமே
அன்பாய் தொலைபேசியிலும்
அழைத்துப் பேசுவீரே
இனி எப்போது அழைப்பீர்
இன்பமாய்க் கதை பேச
உம் குரலைக் கேட்க
உறவுகள் நாம் காத்திருக்கின்றோம்...

அன்பாய் பேசிடும் அண்ணாவே
பண்பாய்ப் பழகிடும் தலைவனே
பாசமாய் அரவணைக்கும் தந்தையே
இன்பமாய் சிரிக்கவைக்கும் நண்பனே
எல்லாமாக வாழ்வில் நின்று
எம்மை வழிநடத்திய தெய்வமே - நீர்
கும்பிளாவளையான் பாதம் சேர
கும்பிடுகின்றோம் அனுதினமும்.

மூத்தவர் நீர் என எம்மனதில்
முன்னுக்கு வைத்தோமே உம்மை
மரணத்திலும் நீரே முதலிடம் என
மதிப்புடன் சென்றீரோ?
உற்றார் உறவினர் உம் பிரிவைக் கேட்டு
உள்ளம் கசிந்து நிற்கின்றனர்.
உடன் பிறப்புக்கள் நாம் ஐவரும்
உம்ஆத்மாசாந்தியடைய வேண்டுகின்றோம்.

ஊரில் நடக்கும் செய்தி கேட்க
உவகையுடன் பேசுவீரே
பழகிய சிலரின் மறைவு கேட்டு
பதறி அழுவீரே நீர்
நாம் இன்று உம் பிரிவைக் கேட்டு
நாவடைத்து நிற்கின்றோமே
ஆறுதல் கூறும் அண்ணாவை இழந்து
அநாதைகளாக நிற்கின்றோம்.

ஒன்றாய்ப் பிறந்தோம்
ஒன்றாய் வளர்ந்தோம்
படித்தோம் விளையாடினோம்
இன்றுமட்டும் ஏன்
தனியாய் சென்றீர்கள்?
பாசமான அண்ணா என்பது
பாதியில் பிரிந்து போவதற்கா?
தாங்கவில்லை மனம் தீரவில்லை சோகம்

**சகோதரர்கள்**

# அன்பான அப்பாவிற்கு

அன்பின் ஊற்று நீங்கள்
அரவணைத்த தெய்வம் நீங்கள்
ஆசையாய் முத்தம் தந்து
ஆர்வத்துடன் கதைகள் பேசி
அறிவுடனே பலவும் கூறி
ஆளாக்கி விட்டு எம்மை
கலங்க வைத்துவிட்டு நீர்
கடவுளிடம் சென்றதேனோ?

விருட்சமாய் நாங்கள் வளர
விழுதாய் தாங்கி நின்றீரே
உத்தமராக வாழ எம்மை
உரமிட்டு வளர்த்தீரே
வளர்ந்துவிட்டோம் நாம்
அடைந்துவிட்டோம் நல்ல நிலை
பார்த்து இரசிக்க நீங்கள் இல்லையென்று
பரிதவித்து நின்கின்றோம் அப்பா....

ஒவ்வொரு நாளும் உங்கள்
முகம் காணாது எம்நாட்கள் விடியாது
இப்போது நீங்கள் வரமாட்டீர்களா
என்ற ஆசையுடன் எதிர்பார்த்து
ஒவ்வொரு காலையும் விடியுது
உங்களைத் தேடி ஏங்குது மனசு
உங்களைக் காணத் துடிக்குது கண்கள்
எங்கே போனீர்கள் அப்பா

உடல் தளர்ந்த போதும் அப்பா
உம் மனம் தளரவில்லையே
அல்லும் பகலும் எம் உயர்வுக்காய்
அயராது நீர் உழைத்தீரே
இறைவனை இறைஞ்சினோம் நாம்
இன்னும் பலகாலம் இருக்க வேண்டுமென
பாதிவழியில் எமைத் தவிக்கவிட்டு
பரமனின் பாதக்கமலம் சென்றதேனோ?

பாசமான அப்பாவே உம் முகம் காணா
பாவிகளாக நாம் பதறி அழுகின்றோம்
வார்த்தை இழந்து புலம்புகின்றோம்
வந்து ஒருகணம் பாராயோ அப்பா
கண்ணிருக்க மணியில்லை
காற்றிருக்க உயிரில்லை
இங்கே உறவிருக்க அருகில்
நீங்கள் இல்லையே அப்பா....

உங்கள் நினைவுகளுடன் வாழும்
**பிள்ளைகள்**

# பாசமான மாமாவே

அன்பான மாமாவே
அருமையான குணம் உமக்கு
கடவுளும் பொறாமை கொண்டு
காலனை அனுப்பினானோ?
அதிகாரம், ஆணவம் இல்லாத
அன்பின் திருவுருவே
அழைப்பேன் இனி யாரை
ஆசையாய் மாமாவென

மருமகன் நீ இல்லை என
மகனாய் நடத்தினீரே
நானும் என் தந்தை போல
நம்பி இருந்தேனே
உங்கள் பிரிவுச் செய்தியறிந்து
உள்ளம் குமுறுகின்றோம்
இப்படிப் பாசமான மாமாவை
இனியொரு பிறவியில் காண்பேனோ?

நான் எந்த முயற்சி செய்தாலும்
நல்லது எனக் கூறி
ஆக்கத்தையும் ஊக்கத்தையும்
அள்ளி இறைத்தீரே
ஈடில்லா உங்கள் இழப்பை
ஈடுசெய்வார் யாருமில்லை
உங்கள் ஆத்மா சாந்தியடைய
உள்ளம் உருகி வேண்டுகின்றேன்.

**மருமகன்**

## எங்கே சென்றீர்கள் தாத்தா?

உங்களுடன் கைபிடித்து
        உவகையுடன் கதைபேசி
இன்பமாக விளையாடிய
        இனிய நாட்கள் பற்பல
முத்தங்கள் எனக்குத் தந்த
        முத்தான நாட்களை எண்ணி
அழுகின்றேன் உங்கள் பிரிவால்
        அரவணைக்க ஓடிவாங்கள் தாத்தா

தாத்தா தாத்தா என
        தாவி உம் மீது ஏறி
மார்பில் படுத்து விளையாடி
        மழலை பேச நினைத்திருந்தேன்
பேரன் நான் வந்துவிட்டேன் என்று
        பேரானந்தம் கொண்டீரே அன்று
இப்போது வந்துள்ளேன் உம்மருகே
        இறங்கிவந்து பாராயோ தாத்தா

மான்குஞ்சு, பொன்குஞ்சு என்று
        மனங்குளிர அழைத்திடுவீரே
என் சிரிப்புக் கண்டு உம்
        எழில்வதனம் மலர்ந்திடுமே
தூக்கத்தில் உள்ளீரே இன்று
        தூரதேசம் போவதற்காய்
தாத்தா உன் பேரன் என பலர் கூற
        தரணியிலிலே தலைநிமிர்ந்து நின்றிடுவேன்.

பேரன்

**இராம்**



ஜேர்மனியில் நடைபெற்ற கலை நிகழ்வில் தபேலா வாசிக்கும் காட்சி

# மைத்துனர் புலம்பல்

எங்கள் வீட்டிற்கு வந்த
முதல் மருமகனே
மருமகனாய் வந்து மகன் போல
அரவணைத்த உத்தமரே
அன்பாய் பழகிய எங்கள்
அருமை அத்தானே
ஆறுதல் கூறும் நீங்கள் இன்று
அவசரமாய்ப் போனதேனோ?

பொய்யாகக் கூடாதோ
இச் செய்தி
மெய்யாக நீங்கள்
எழுந்துவர மாட்டீரோ
அத்தான் என்று கதைக்க
அருகில் இருந்து சிரிக்க
பாசமாய்ப் பழகிட
பறந்து நீர் வரமாட்டீரோ?

வீட்டில் அனைவரையும் அழைத்து
விருப்புடன் கதை பேசுவீரே
பாசமாய்ப் பழகி எம்முடன்
பரிதவிக்க விட்டுச் சென்றதேனோ
அத்தானின் அன்பிற்கு நாம்
அனைவருமே அடிமைகள்
காலனும் உம் மீது
கடும்பாசம் கொண்டு விட்டான்

உம் ஆத்மா சாந்தியடைய இறைனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மைத்துனர்கள்**

# கணாஞ்சலி

1970களில் பிற்பகுதியை மீட்டிப்பார்க்கின்றேன் சுமார் நான்கு சகாப்தங்கள் தாண்டியிருப்பினும் அளவையூரின் நினைவு கள் இன்னும் நெஞ்சில் பதிந்திருக்கின்றது. எனது தந்தை திரு மு. திருநாவுக்கரசு ஒரு இளமையான துடிப்பான சட்டத்தரணி அவரது அரசியல் ஈடுபாடும், சொல்வன்மையும் அவரை நோக்கி அளவை வாலிபர்களை ஈர்ந்தெடுத்த காலம் எமது வீட்டில் என்றும் வாலிபர் கூட்டத்திற்கு குறைவே இல்லை. அக்கூட்டத் தில் எப்பவும் ஓர் துடிப்பான, மிடுக்கான, சற்றே கடுமையான இளைஞர் இருப்பார் அவரே அமரர் திரு ஸ்ரீகணநாதன் "கணன்" என்றும் "கணப்பா" என்றும் எனது தந்தையார் அவரை அழைப்பதுண்டு எமது வீட்டில் ஒரு நெருங்கிய உறவினர் போல அவர் உறவாடுவார். வீட்டில் நடைபெற்ற ஒவ்வொரு வைபவங்களிலும் அவரின் பங்கு இருக்கும் கணன் அண்ணா வுக்கு உணவு பரிமாறுவதில் எனது பெற்றோருக்கு அப்படியொரு இன்பம் உணவை சுவைத்து உண்பதில் அவருக்கு நிகர் அவரே தான் மிருதங்கத்தில் அவரது பாண்டித்தியம் அவரது கலை ஆர்வத்தை பறைசாற்றி நின்றது.

எனது நினைவுகளில் பதிந்த மற்றுமொரு விடயம் சற்றே நேர்மாறான அவரது தந்தையின் சுபாவம் அமரர் திரு சிவஞானத்தை கும்பழாவளை விநாயகர் ஆலயத்தில் அல்லும் பகலும் சந்திக்கலாம் ஆதிமூல வாசலிலுள்ள தீபங்களுக்கு எண்ணெய் ஊற்றுவதிலும், தீபம் ஏற்றுவதிலும் கும்பழாவளை விநாயகர் பஜனைகளில் ஹார்மோனியத்துடன் அவர் காட்சியளிப் பதும் என் மனதில் இன்னும் பசுமரத்தாணிபோல் பதிந்துள்ளது.

இந்த நாட்டைவிட்டு மேற்குலகம் சென்றாலும் கணன் அண்ணாவுடனான தொடர்பு அப்பாவுக்கு கடைசி காலம் வரை இருந்தது கணன் அண்ணாவின் நிவைுகளை அவர் பலமுறை எம்முடன் மீட்டதுண்டு கணன் அண்ணவின் பிரிவு எமது குடும்பத்திற்கு நெருங்கிய ஒருவருடைய இழப்பைப் போன்று அதை ஈடுசெய்ய முடியாது அவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**Dr. தி. குமணன்**
(மு. திருநாவுக்கரசு குடும்பம்)



கலை நிகழ்வின் போது
தபேலா வாசிக்கும் காட்சி

# "கும்பழாவளையான் தந்த குலவிளக்கு கணன்"

பொன்னொச்சியும், திருவாத்தியும், நாவலும், வேம்பும், ஆலும், அரசும், பூவரசும், கற்பகமும், கேணியும், குளமும், வயலும், வாய்க்காலும், தருக்களும், பசுக்களும், வரகும், நெல்லும், சாமையும், குரக்கனும், பாலும், நெய்யும், பொலிந்த பதி **அளவையம்பதி.**

அந்தணரும் அறவோரும், அறிஞரும், புலவரும், வைத்தியரும், ஜோதிடரும், சட்டம்பிமாரும், சாதுக்களும், கலைஞரும், இளைஞரும், கண்பரிகாரியும், கைவைத்தியக் காரரும், கொலுவிருந்த அளவெட்டியில், கும்பழாவளையானை அல்லும் பொழுதும் இல்லம் சிறக்க, தானதர்மங்கள் போற்றி வாழ்ந்த குடும்பம் இசைஞானகுரல், விரல்கான, பஜனாம்ருத வாரிதியே, அமரர் சிவஞானம் அவர்கள். கும்பழாவளைப் பிள்ளையாரைத் தினமும் காலை மாலை ஒழுங்காகச் சந்தித்து வரம் வாங்கும் பலருள்ளே சிவஞானம் தம்பதியரும், அவர்தம் குடும்பத்தவர்களும் முதன்மை பெறுகிறார்கள். அத்தகு குடும்பச் சுவாத்தியத்தில் உதித்த பேறான தலைமகன்தான் அமரர் ஸ்ரீகணநாதன் அவர்கள். இவர் பிள்ளையாரின் அருளால் பிறந்தமையால், கணபதி என்ற அதிபதியின் நாமமென, பூதகணங்களுக்கதிபதியாகிய விநாயகரின் அம்சங்களைத் தாங்கிய நாமகரணம் சூட்டப்பட்டது. ஒவ்வொரு வீட்டிலும் பிறக்கும் ஒரு ஆண் குழந்தைக்குக் கருணையின் இருப்பிடமான பிள்ளையாரின் நாமம் ஒலிவடிவில் பிரவாகிக்கும். இந்த வீட்டிலும் **'கணன்' கணன், கணன்** என்று அடிக்கடி விநாயகப் பெருமானைக் கூவியழைப்பர். கும்பழாவளையானும் கூப்பிட்ட குரலுக்கு ஓடிவந்து முன்னின்று வரமளிப்பான்.

*மணிமலர் மாலைகள்*
*மணமலர் மாலைகள்*
*அணியணி விளங்கும்*
*ஐங்கரமூர்த்தி யருளால்,*

கணன் தந்தையார் போலக் கும்பழாவளையானை உயிராக வணங்கியபடியால் கல்வி கேள்விகளில் மட்டுமல்லாது, லயஞான விரலிசைக் கலையிலும் கீர்த்தி பெற்றார். இசைநிகழ்ச்சிகளில் மிருதங்கம் வாசித்துப் பிரகாசித்தார். குடும்பம் உயர்ந்தது. வெளிநாடு அழைத்தது. உத்தியோகம் கிடைத்தது. திருமணம் அரங்கேறியது. குடும்பம் பல்கலைக்கழகமானது. வாழ்க்கை பேரானந்தமடைந்தது. நிறைவான பேரின்பத்தில் திருப்தி கொண்டார். கும்பழாவளை யானின் திருவடியில் கணன் இசையோடு வாழ்கின்றார். ஸ்ரீகணநாத சாம்ராஜ்ஜியத்தில், மனைவியாக அமைந்த பாக்கியம் ஜெகதீஸ்வரி அம்மையார் வரமாக அமைந்தது. மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் சரியாகப் பொருந்தியதெனலாம்.

ஸ்ரீதாட்சாயணி, ஸ்ரீகஜன் இருவரும் மாதா பிதாவின் அரவணைப்பில் வளர்ந்து, இன்று நல்லதோர் உன்னத நிலையில் போற்றப்படுகின்றார்கள். பிள்ளைகள் என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும் என்ற வாழ்த்துக்குக் 'கணன்' இல்லற வாழ்வின் நிறைவான வாழ்விற்கு எல்லாம் வல்ல கும்பழாவளையான் வழிகாட்டியுள்ளார்.

இலங்கையிலிருந்து, அளவெட்டியானது தனது ஆழ்ந்த அனுதாபங்களையும், பிரார்த்தனைகளையும் கணன் குடும்பத்தவர்களுக்கு வழங்குவதில் ஆத்ம திருப்தியடைகிறது.

வணக்கம்.
ஓம் சாந்தி!!!

**கே. எஸ். சிவஞானராஜா**

உ

கணபதி துணை



# விநாயகர் காரியசித்தி மாலை

1. பந்தம் அகற்றும் அனந்தகுணப்
பரப்பும் எவன்பால் உதித்திடுமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து கரந்திடுமோ
சந்த மறை ஆகமங்கலைகள்
அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்புகூரத் தொழுதிடுவோம்.

2. உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொருளெவன் அவ்
உலகில் பிறங்கும் விவகாரம்
உறாத மேலாம் ஒளியாவான்
உலகம் புரியும் வினைப் பயனை
ஊட்டும் களைகள் எவன் அந்த
உலகம் முதலாம் கணபதியை
உவந்தே சரணம் அடைகின்றோம்.

3. இடர்கள் முழுவதும் எவனருளால்
எரி வீழும் பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர் வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவு மருப்பற் கணபதி பொன்
சரணம் சரணம் அடைகின்றோம்.

4. மூர்த்தி ஆகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்தம் ஆகி அறிந்தறியாத்
திறத்தி னாலும் உயிர்க்கு நலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப் பான் எவன் அப்
போர்த்த கருனைக் கணபதியை
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

5. செய்யும் வினையின்முதல் யாவன்
செய்யப்படும் அப்பொருள் யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்த கருமப் பயன் யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவில்
ஊட்டி விடுப்பான் எவன் அந்த
பொய்யில் இறையைக் கணபதியைக்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

6. வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேதமுடிவில் நடம் நவிலும்
விமலன் யரவன் விளங்கும்பா
நாதமுடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன் எண்குணன் எவன்அப்
போதமுதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

7. மண்ணின் ஓர் ஐங்குணமாகி
வதிவான எவனநீர் இடைநான்காம்
நண்ணி அமர்வான் எவண்தீயின்
மூன்றாய் நவில்வான் எவன்வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இயை வான் எவன் வான் இடை ஒன்றாய்
அண்ணன் எவன் அக்கணபதியை
அன்பால் சரணம் அடைகின்றோம்.

8. பாச அறிவிற் பசு அறிவில்
பற்றற் கரிய பரன் யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
பயிலப் பினிக்கும் அவன் யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
பற்றி மேலாம் அறிவான
கேசன் எவன் அக் கணபதியை
திகழ சரணம் அடைகின்றோம்.

9. திங்கள் இரண்டு தினந்தோறும்
திகழ ஒருபான் முறையோதின்
தங்கும் அரச வசியமதாம்
தங்கும் இருப்தொரு முறைமை
பொங்கும் உருக லால்கிளப்பின்
பொவில் மைந்தர் விழுங்கல்வி
துங்க வெறுங்கை முதற்பலவும்
தோன்றும் எனச்செப் பினர் மறைந்தார்

10 இந்த நமது தோத்திரத்தை
யாவன் மூன்று தினம் மும்முறைச்
சந்தி களில்தோத் திரஞ் செயினும்
சகல கரும சித்தி பெறும்
சிந்தை மகிழச் சுகம்பெறும் எண்
தினம் உச் சரிக்கின் சதுர்த்தியிடை
பந்தம் அகல ஓர்எண்கால்
படிக்கின் அட்ட சித்தியுறும்



உ
கணபதி துணை



## ஔவையார் அருளிச்செய்த

# விநாயகர் அகவல்

சீதக்களபச் செந்தா மரைப்பூம்
பாதச்சிலம்பு பலவிசைப்பாடப்
பொன்னரைஞாணும் பூந்துகிலாடையும்
வண்ணமருங்கில் வளர்ந்தழகெறிப்பப்
பேழைவயிறும் பெரும்பாரக்கோடும்
வேழமுகமும் விளங்கு செந்தூரமும்
அஞ்சுகரமும் அங்குசபாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன்முடியுந்
திரண்ட முப்புரி நூல் திகழொளிமார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞான
அற்புதநின்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரும் மூஷிக வாகன
இப்பொழுதென்னை யாட்கொளவேண்டித்
தாயாயெனக்குத் தானெழுந்தருளி
மாயாப்பிறவி மயக்கமறுத்துத்

திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென்னுள்ளந்தனிற் புகுந்து
குருவடிவாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடாவகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடாயுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டாவுபதேசம் புகட்டி யென்செவியில்
தெவிட்டாத ஞான தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னையடக்குமுபாயம்
இன்புறுகருணையின் இனிதெனக்கருளி
கருவிகளொடுங்குங் கருத்தினையறிவித்
திருவினைதன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக்கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறாதாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரையறுத்தே
இடைபிங்கலையின் எழுத்தறிவித்து
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணிகள்
நான்றெழுபாம்பி னாவினாலுணர்த்திக்
குண்டலியதனிற் கூடியவசபை
விண்டெழு மந்திரம் வெளிப்படவுரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழுகனலைக்
காலாலெழுப்புங் கருத்தறிவித்தே
அமுதநிலையும் ஆதித்தனியக்கமும்
குமுதசகாயன் குணத்தையுங்கூறி
இடைச்சக்கரத்தின்ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்குமமும்
எண்முகமாக இனிதெனக்கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசெனப்படுத்தி

கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கு மனமும் இல்லாமனோலயந்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்
திருள் வெளியிரண்டுக் கொன்றிடமென்ன
அருள்தருமானந்தத் தழுத்தி யென்செவியில்
எல்லையில்லா ஆனந்தமளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தினுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தினுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமு நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும் பொருடன்னை
நெஞ்சக் கருத்தி னிலையறிவித்து
தத்துவ நிலையைத் தந்தெனையாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.



உ
சிவமயம்



*மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த*

*திருவாசகம்*

## திருவாசச் சிறப்பு

தொல்லை இரும்பிறவிச் சூழும்தளை நீக்கி
அல்லலறுத் தானந்த ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூரெங்கோன்
திருவா சகமென்னுந்தேன்.

# சிவபுராணம்

(கலிவெண்பா)
திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்ற ண்ணிப்பான் றாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவா உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன்அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்

அவனருளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்நிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாக வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்க மளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கும் மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கலப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேன் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேஓ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற்பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்.

உ
சிவமயம்



ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்த

# சகல கலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன் றிநின் பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோ சகமேழுமளித்
துண்டா னுறங்க வொழித் தான்பித்
தாகவுண்டாக்கும் வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட றூற்கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர் செந்நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழிதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோமதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமு மவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பினுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.



# இயற்கை மருத்துவம்

1. என்றும் 16 வயது மார்க்கண்டேயராக வாழ - நெல்லிக்கனி
2. இதயத்தை வலுப்படுத்த - செம்பருத்தி
3. மூட்டுவலியைப் போக்க - முடக்கத்தான் கீரை
4. இருமல், மூக்கடைப்பு குணமாக - கற்பூரவல்லி
5. நீரிழிவு நோய் குணமாக - அரைக்கீரை
6. வாய்ப்புண், குடற்புண் குணமாகக - மணத்தக்காளிக் கீரை
7. உடலைப் பொன்னிறமாய் வைக்க - பொன்னாங்காணி
8. மாரடைப்பு நீங்க - மாதுளம்பழம்
9. இரத்தத்தைச் சுத்தமாக்க - அறுகம்புல்
10. கான்சர் நோயைக் குணமாக்க - சீதாப்பழம்
11. மூளை வலிமைக்கு - பப்பாளிப்பழம்
12. நீரிழிவு நோய் குணமாக - முள்ளங்கி, வில்வம்
13. இரத்த அழுத்தத்தைக் குணமாக்க- துளசி, பசளிக்கீரை
14. மார்புச்சளியை நீக்க - சுண்டைக்காய், தூதுவளை
15. சளி, ஆஸ்துமாவுக்கு - ஆடாதோடை
16. ஞாபசக்தியைக் கொடுக்க - வல்லாரை
17. இரத்தச்சோகையை நீக்க - பீற்றூட்
18. ஜீரண சக்தியை அதிகரிக்க - அன்னாசி
19. முடி நரைக்காதிருக்க - கல்யாண முருங்கை (முள்முருங்கை)
20. அஜீரணத்தைப் போக்க - புதீனா
21. கண்பார்வை அதிகரிக்க - கரட், மல்லிக்கீரை
22. மஞ்சள் காமாளையைப் போக்க - கீழ்க்காய் நெல்லி
23. சிறுநீரகக் கற்களைத் தூள்களாக்க - வாழைத்தண்டு
24. தலைப் பொடுகை விரட்ட - எலுமிச்சம்பழம்
25. வாயுத்தொல்லையிலிருந்து விடுபட - வெந்தயக்கீரை

# 'உணவுப் பழக்கம்' பழமொழி வடிவில்

1. காட்டிலே புலியும் வீட்டிலே புளியும் ஆளைக் கொல்லும்.
2. போன யுரத்தைப் புளியிட்டு அழைக்காதே
3. பொங்குற காலத்தில் புளி மங்குற காலம் மாங்காய்
4. சீரகம் இல்லா உணவும் சிறு குழந்தைகள் இல்லா வீடும் சிறக்காது.
5. எண்ணெய்க் குடத்தைச் சுற்றிய எறும்பு போல
6. தன்காயம் போக்க வெங்காயம் போதும்.
7. வாழை வாழ வைக்கும்.
8. அவசரச்சோறு ஆபத்து
9. ஆறிய உணவு மூட்டுவலி உண்டாக்கும்.
10. இரப்பைப் புண்ணுக்கு எலுமிச்சைச் சாறு.
11. இரத்தக் கொதிப்பிற்கு அகத்திக் கீரை
12. இருமலைப் போக்க வெந்தயக்கீரை.
13. உண்ணா நோன்பு ஆயுளைக் கூட்டும்.
14. உஷ்ணம் தவிர்க்க கம்பங்கழி
15. கல்லீரல் பலம்பெற கொய்யாப்பழம்.
16. குடற்புண் நலம்பெற அகத்திக்கீரை
17. சித்தம் தெளிய வில்வம்.
18. சிறுநீர்க் கடுப்புக்கு அன்னாசி.
19. தலைவலி நீங்க முள்ளங்கிச் சாறு.
20. தேனுடன் இஞ்சி இரத்தம் தூய்மை
21. பூண்டில் இருக்கும் பென்சிலின் சக்தி.
22. வாய்த் துர்நாற்றம் நீக்க ஏலக்காய்.
23. பருமன் குறைய முட்டைக்கோஸ்.
24. பித்தம் தணிய நெல்லிக்காய்.
25. வாதநோய் தடுக்க அரைக்கீரை.
26. சூட்டைத் தணிக்க கருணைக்கிழங்கு.
27. வாந்திக்கு மருந்து மணத்தக்காளி.

"உணவு மருந்தாக இருக்கவேண்டும்..... இல்லாவிட்டால் மருந்தே நமக்கு உணவாகும் நிலை ஏற்படும்."

# இஞ்சி சமையலறை மருத்துவர்

- இஞ்சிச் சாறைப் பாலில் கலந்து சாப்பிட வயிறு நோய்கள் தீரும். உடம்பு இழைக்கும்.
- இஞ்சித்துவையல் பச்சடி வைத்து சாப்பிட மலச்சிக்கல், களைப்பு தீரும்.
- இஞ்சி சுட்டுச் சாப்பிட பித்த, கப நோய்கள் தீரும்.
- இஞ்சிச்சாறில் வெல்லம் கலந்து சாப்பிட்டால் வாதம் வராது.
- இஞ்சியைப் புதீனாவோடு சேர்த்துத் துவையலாக்கிச் சாப்பிட்டால் பித்தம், வாய் துர்நாற்றம் தீரும், சுறுசுறுப்பு ஏற்படும்.
- காலையில் இஞ்சிச்சாறில் உப்பு கலந்து மூன்று நாட்கள் சாப்பிட பித்த தலைச்சுற்று நீங்கும், உடம்பு இளமை பெறும்.
- இஞ்சி, பூண்டு இரண்டையும் அரைத்து ஒரு கப் வெந்நீரில் கலந்து காலை, மாலை சாப்பிட மார்புவலி நீங்கும்.
- இஞ்சிச்சாறில் தேன் கலந்து சாப்பிட்டால் நோய் தடுப்புதிறன் கூடும். இளமை பெருகும்.
- இஞ்சிச்சாறுடன் வெங்காயச்சாறு கலந்து காலையில் குடித்துவர நீரிழிவு குறையும்.
- இஞ்சியை அரைத்து நீரில் கரைத்து துளசி இலைச்சாறுடன் கலந்து ஒரு கரண்டி வீதம் ஒரு வாரம் சாப்பிட்டால் வாய்வுத் தொல்லை நீங்கும்.

# தேனின் பலன்கள்

¤ பாலில் தேன் கலந்து சாப்பிட்டால் நல்ல தூக்கம் வரும். இதயம் பலம் பெறும்.

¤ பழச்சாறுடன் தேன் கலந்து சாப்பிட்டால் நல்ல சக்தி கிடைக்கும்.

¤ மாதுளம்பழத்துடன் தேன் கலந்து சாப்பிட்டால் புது இரத்தம் உண்டாகும்.

¤ எலுமிச்சம் சாறுடன் தேன் கலந்து சாப்பிட்டால் இருமல் நீங்கும்.

¤ நெல்லிக்காயுடன் தேன் கலந்து சாப்பிட்டால் இன்சுலின் சுரக்கும்.

¤ ஆரஞ்சுப் பழத்துடன் தேன் கலந்து சாப்பிட்டால் நல்ல தூக்கம் வரும்.

¤ றோஜாப்பூவுடன் தேன் கலந்து சாப்பிட்டால் உடல் சூடு தணியும்.

¤ தேங்காய்ப்பாலில் தேன் கலந்து சாப்பிட்டால் குடல்புண், வாய்ப்புண்கள் மாறும்.

¤ இஞ்சியுடன் தேன் கலந்து சாப்பிட்டால் பித்தம் தீரும்.

¤ கரட்டுடன் தேன் கலந்து சாப்பிட்டால் இரத்தச்சோகை தீரும்.

¤ தேனில் சுண்ணாம்பு கலந்து தடவ கட்டிகள் உடையும் அல்லது வீக்கம் குறையும்.

# மாரடைப்பு...... ஓர் அறிமுகம்

## மாரடைப்பு (Heart Attact) என்றால் என்ன?

எமது இதயம் சக்தி வாய்ந்த பம்பியாகச் செயற்பட்டு உடல் முழுவதற்கும் குருதியை வழங்குகின்றது. இதயத் தசைக்கு குருதி வழங்கும் முடியுரு நாடியின் (Coronary arteries) ஓட்சியேற்றப்பட்ட குருதியைத் தேவையான அளவு வழங்குவதன் மூலம் இதயத்தை ஆரோக்கியமாகப் பேணுகின்றன. இரத்தக்கட்டி அடைதல், கொலஸ்ரோல் படிவு, முடியுரு நாடியின் சுவரில் ஏற்படும் சுருக்கம் என்பவற்றால் முடியுரு நாடியில் இரத்தோட்டம் தடைப்படுவதால் அந்நாடியில் குருதி வழங்கப்படும் இதயத்தின் தசைப்பகுதியில் ஒட்சிசன் பற்றாக்குறை ஏற்படுகின்றது. இதனால் அப்பகுதி நிரந்தரமான பாதிப்புக்கு உள்ளாகின்றது. இந்நிலையே மாரடைப்பு ஆகும்.

### மாரடைப்பு ஏற்படுவதைத் தூண்டும் காரணிகள் (Risk Factors) யாவை?

### மாற்றமுடியாத காரணிகள் (Fixed)

- வயது (Age)
- ஆண்பால் (Male sex)
- குடும்பத்தில் நெருங்கிய உறவினர் மாரடைப்பால் பாதிக்கப்பட்டிருத்தல் (Positive Family History)

### மாற்றக்கூடிய காரணிகள் (Changeable)

- குருதியில்அதிகரித்தகொழுப்பின் அளவு (Hyper lipidaemia)
- சிகரெட் புகைத்தல் (Cigarette Smoking)
- உயர் குருதியமுக்கம் (Hyper tension)
- நீரிழிவு (Diabetes Mellitus)
- போதிய உடற்பயிற்சி இன்மை (Lack of Exercise)

- உடற்பருமன் (Obesity) சிலவகை மருந்துகள் (உ-ம்) கர்ப்பத்தடை மாத்திரைகள்)
- அதிகமான மதுபாவனை (Heavy Alcohol Consumption)

**மாரடைப்பின் அறிகுறிகள் (Symptoms) எவை?**

- நெஞ்சுப் பகுதியில் மிக லேசான அசௌகரியம் முதல் கடுமையான நெஞ்சுவலி வரை அறிகுறிகள் வேறுபடலாம்.
- நடு நெஞ்சுப்பகுதியில் மார்பெலும்புக்குப் பின்னால் பாரமான (Heaviness) அல்லது இறுக்குவது போன்ற (Tightening) அல்லது எரிவுத் தன்மையான (Burning) வலி ஏற்படும். இவ்வலி வகைகள் (Arms) கழுத்து (Neck), தாடை (Jaw), முதுகு (Back), மேல்வயிறு (Epigastric Region) நோக்கிப் பரவலாம் அல்லது இவற்றில் ஏதாவது ஒரு இடத்தில் மட்டும் ஏற்படலாம்.
- இத்துடன் வயிற்றுப்பிரட்டல், வாந்தி, அதிக வியர்வை, மூச்சு விடுவதில் சிரமம் என்பனவும் ஏற்படலாம்.
- சிலர் இவ் அறிகுறிகளை சமிபாட்டுக்குறைவு (Indigestion) என்று தவறாகப் புரிந்துகொள்கின்றனர்.
- சிலருக்கு வலி இல்லாமலும் (Silent) மாரடைப்பு ஏற்படலாம். இந்நிலையில் பொதுவாக நீரிழிவு நோயாளிகளில் காணப் படுகின்றது.
- எவ்வாறாயினும் உடனே வைத்தியசாலைக்குச் சென்று முறையான பரிசோதனைகளுக்கு ECG மற்றும் குருதிப் பரிசோதனைக்கும் உட்படுவதன் மூலம் மாரடைப்பு ஏற்பட வில்லை என்பதை உறுதிசெய்வதே பாதுகாப்பானதாகும்.

**நெஞ்சு நோவுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் ஒருவருக்கு எவ்வாறு சிகிச்சை அளிக்கப்படுகின்றது**

- முதலில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு விரைவான மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுகின்றார்.
- வைத்தியரும் தாதிய உத்தியோகத்தரும் நோயாளியின் குணங்குறிகளையும், நோய் பற்றிய சரிதையையும் அறிந்து கொள்கின்றனர்.

- தேவையான உடற்பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- ECG மற்றும் குருதிப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் சிகிச்சை ஆரம்பிக்கப்படுகின்றது.
- இதேநேரத்தில் வலி நிவாரணிகள், ஒட்சிசன் என்பனவும் வழங்கப்படுகின்றன.
- மாரடைப்பு ஏற்பட்டிருப்பது உறுதிசெய்யப்படும் பட்சத்தில் நோயாளி இதயசிகிச்சைப் பிரிவுக்கு (Coronary Care Unit) மாற்றப்பட்டு சிகிச்சை ஆரம்பிக்கப்படுகின்றது.
- மாரடைப்பு ஏற்பட்டு முதல் 48 மணிநேரத்துக்குள் மீண்டும் மாரடைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகம் என்பதாலும் இதயத்துடிப்பில் சீரற்ற நிலை ஏற்பட்டு உயிர் ஆபத்து நிகழலாம் என்பதாலும் நோயாளி அதிதீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுகின்றார்.

**மாரடைப்பு ஏற்பட்டது உறுதிசெய்யப்பட்ட பின்னர் எவ்வாறு சிகிச்சை அளிக்கப்படுகின்றது?**

இரத்தக் கட்டியைக் கரைப்பதற்கான Thrombolysis மருந்து உட்செலுத்தப்படுகின்றது. இம்மருந்து இரத்தக் கட்டியைக் கரைப்பதால் தடைப்பட்டிருந்த முடியுரு நாடியின் குருதியோட்டம் சீர்செய்யப்படுகின்றது. இதனால் இதயத்தசையில் பாதிக்கப்பட்ட பரப்பளவு மட்டுப்படுத்தப்படுவதுடன் அதன் அயற்பகுதிகளோ அல்லது அந்த முடியுரு நாடியால் குருதி வழங்கப்படும் இதயத்தின் மற்றைய பகுதிகளோ பாதிக்கப்படுவது தடுக்கப்படுகின்றது. அத்துடன் அடுத்தடுத்து மாரடைப்பு ஏற்படுவதும் தடுக்கப்படுகின்றது.

இச்சிகிச்சை முறை மாரடைப்பு ஏற்பட்டு 12 மணித்தியாலத்துக்குள் வழங்கப்படின் மிகவும் நற்பயன் அளிக்கக் கூடியதாகும். அதிலும் மாரடைப்பு ஏற்பட்டு ஓரிரு மணித்தியாலத்துக்குள் வழங்கப்படின் இரத்தக்கட்டி முற்றாகக் கரைவதற்கான (Computer Thrombolysis) வாய்ப்பு மிகவும் அதிகம். இதனால் உயிராபத்து ஏற்படுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவடைகின்றது. எனவே நெஞ்சுநோ ஏற்பட்ட உடனே

வைத்தியசாலையை அணுகுதல் நோயாளியின் நலனைப் பொறுத்தவரை மிகவும் முக்கியமான விடயமாகும்.

இவ்வகையான சிகிச்சை முறை யாழ். மாவட்டத்தில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும் மற்றும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையிலும் மட்டுமே வழங்கப்படுகின்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

இது தவிர இதயத் தொழிற்பாட்டை மேம்படுத்துதல் இதயத்துடிப்பு வேகத்தையும் குருதி அமுக்கத்தையும் குறைப் பதன் மூலம் இதயத்தசையின் வேலைப்பழுவைக் குறைத்தல், குருதியிலுள்ள கொழும்பின் அளவைக் குறைத்தல், குருதியில் உள்ள குளுக்கோசின் அளவை மட்டுப்படுத்துதல் என்பவற்றுக் குரிய மருந்துகள் வழங்கப்படுகின்றன.

அத்துடன் ஆரோக்கியமான உணவு, பழக்கவழக்கங்கள் பற்றிய ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

**மாரடைப்புக்கானசிகிச்சையின்(ECHO Cardiogram) இன் பங்கு என்ன?**

அதிவேக ஒலியலைகள் (Ultrasound Waves) நெஞ் சறைக் கூட்டினூடாக இதயத்தினுள் செலுத்தப்படுகின்றது.

இதன் மூலம் இதயத்தின் அறைகளின் அளவு Chamber size இதயத்தசையின் தடிப்பு, இதயத்தின் தொழிற்பாட்டுத் திறன், இதய அறைகளில் சுவர்களின் சுருக்கத்தில் ஏற்பட்ட பாதிப்பு (Regional wall motion defcct), வால்புகளில் ஏற்பட்ட பாதிப்பு, இதயத்தினுள் இரத்தக்கட்டி காணப்படுகின்றதா, இதயத்தைச் சுற்றித் திரவம் காணப்படுகின்றதா (Pericardial Effusion) என்பன போன்ற விடயங்களைக் Pericardial Effusion கண்டறிந்து அவற்றுக்கான சிகிச்சை விரைவாக ஆரம்பிக்கலாம்.

**Exercise ECG செய்யப்படுவதன் நோக்கம் என்ன?**

மாரடைப்பு ஏற்பட்டு 6 வாரங்களினுள் Exercise ECG மேற்கொள்ளப்படுகின்றது. இதன்போது உடற்பயிற்சியில் ஈடுபட்ட நேரத்தையும் இப்போது ECG இல் ஏற்பட்ட மாற்றத்தையும்

கொண்டு இதயத்தில் ஏற்பட்ட பாதிப்பின் அளவை அறிந்துகொள்ளலாம்.

இவ்வாறு இனங்காணப்பட்ட நோயாளிகளுக்கு Coronary Angiogram பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது.

**Coronary Angiogram என்றால் என்ன?**

இரத்தக்குழாயினுள் விசேட சாயமூட்டியைச் (Dye) செலுத்தி இதயத்தின் முடியுரு நாடிகளின் இரத்தோட்டத்தை அறிதலாகும். இதன்மூலம் பெறப்படும் படங்கள் முடியுரு நாடிகளில் ஏற்பட்டுள்ள அடைப்புகளின் அளவு, அமைவிடம், அதன் தீவிரத்தன்மை பற்றித் துல்லியமாகத் தெளிவுபடுத்துகின்றன. இதை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு நோயாளியினதும் இதயநோயின் தாக்கத்திற்கு ஏற்றவாறு சிகிச்சை முறைகள் தெரிவுசெய்யப்படுகின்றன.

1. Medication - மருந்து மூலமான சிகிச்சை
2. Balloon Angioplasty and coronary stenting
3. Coronary artery - by pass surgery

**மனதிற் கொள்ள வேண்டியவை**

- மாரடைப்பு உயிராபத்தானது.
- மேற்கூறிய குணங்குறி உடையவர்கள் அருகில் உள்ள வைத்தியசாலைக்குச் சென்று ECG பரிசோதனைகள் மேற்கொண்டு மாரடைப்பு இல்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
- மாரடைப்பு ஏற்பட்டவுடன் வைத்தியசாலையை அணுகுவதன் மூலம் மாரடைப்பால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்ளலாம்.

# நன்றி நவிலல்

**"எந்நன்றி கொன்றாற்கும் உய்வுண்டாம் - உய்வில்லை**
**செய்நன்றி கொன்ற மகற்கு"**

என்ற திருவள்ளுவர் வாக்கிற்கிணங்க எங்கள் குடும்பத் தலைவரின் மரணச் செய்தியறிந்து ஓடோடி வந்து உதவிகள் புரிந்தவர்களுக்கும், ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும் மற்றும் வெளிநாடு, உள்நாடுகளிலிருந்து மலர் அஞ்சலி, மலர் செண்டுகள், கண்ணீர் அஞ்சலிகள், திருப்பதிகங்கள் பாடியும், தொலைபேசி அழைப்புக்கள் மூலமும் முகப்புத்தகங்கள் வாயிலாகவும், ஏனைய வழிகள் மூலமாகவும் துயரினைப் பகிர்ந்தும் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்த நண்பர்கள் உறவினர்களுக்கும், தூரதேச உறவுகளுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவியவர்களுக்கும் உறுதுணையாக இருந்த அனைத்து உறவுகள் நண்பர்களுக்கும் உங்கள் கைகளில் தவழும் இம்மலரினை அழகுற அச்சிட்டு உதவிய சங்கானை திருமொழி அச்சகத்தாருக்கும் எங்கள் நன்றிகள் பற்பல.


*"நன்றி மறப்பது நன்றன்று"*



இங்ஙனம்
என்றும் நன்றியில் நயப்புறும்
**குடும்பத்தினர்**

# அமரர் உயர்திரு சிவஞானம் ஸ்ரீ

## வம்ச விரு



# வஞானம் ஸ்ரீகணநாதன் அவர்களின்

## வம்ச விருட்சம்

ி ஏகாம்பரநாதன்
+
ி பவித்திரா
→ அஸ்ணவி
அஸ்வின்

*அரசதுங்கம்
+
*தெய்வநாயகி

கிலேஸ்வரி
+
குநாதன்
→ திர்சன்
ிருஷ்ணா
அசோக்

திலகவதி
+
வித்தியாதரன்
→ ஐஸ்வர்யா

வசந்தாதேவி
+
நடனசிவம்
→ பத்மவிந்
பிரசாந்

கதிர்காமநாதன்
+
தனமதி
→ யஸ்மிதாய
யதுப்பிரியா
பவதாரன்

*யசோ

கமலக்கண்ணன்
+
கடாஷினி
→ உமேஷ்காந்த்
மதுலிகா

ஸ்ரீஉமையாள்
+
துஷ்யந்தன்
→ புருஷோத்
தர்ஜின்

* இக்குறி அமரர்களைக் குறிக்கும்




எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதாகிறதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.